# காதல்

## Story 59




காதல் என்பது ஒருவித வலை. அது அவர்களை பெத்து வளர்த்த பெற்றோர்களின் கையைவிட்டு விலக்கி, படிப்பையும் பட்டத்தையும் ஒரு பொருட்டாக அவர்களை சிந்திக்க விடாமல் எதிர்காலத்தில் உள்ள ஆசீர்வாத மான பேரின்பத்திற்குள் அவர்களை நுழையவிடாமல் சிற்றின்பத்தில் சிக்க வைக்கும் அந்த வலைதான் காதல்.

அதை, கடவுளாக பார்க்கும் வாலிபம், இன்று அதை விக்கிரகமாக்கி அதை தொழுகிறபடியினால், இரண்டாம் கட்டளையிலேயே விழவைத்து நம்முடைய ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்துவின் மெய் அன்பை விட்டே பிரிக்கத் துடிக்கும் கண்ணி தான் காதல்.

பெற்றோர்களின் ஆசை விருப்பங்கள், கனவுகள் எல்லாம் காற்றில் பறக்க விட்டு தன்னுடைய வாலிப வயதில் குடும்பம் என்றால் என்ன? என்று தெரியாத சூழ்நிலையில் அந்த காதலோடு கைகோர்த்து, இன்று சிக்கலில் இருக்கும் அநேகர் உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும்..

வெற்றி பெற்ற காதலர்கள் திருமணத்திற்குப் பின் அவர்கள் அநேகரின் கதறல்கள் எங்கள் உள்ளத்தை தொட்டபடியினால், வேண்டாம் அது உங்களுக்கு வேண்டாம்.

என்றுரைக்கும் வார்த்தைகளை கேளுங்கள்.

காலம் முழுவதும் வேண்டாம் அந்த சிறை…..

என்றும் விடுதலையோடு தேவனை ஆராதித்து தேவன் உனக்கென உன் எலும்பிலிருந்து உருவாக்கி உன் கண்முன் கொண்டுவருகிற அந்த ஏவாள் போதும் என்ற நல்ல மனதுடன் இருப்பாயா?

ஏவாளே! கர்த்தர் கரத்திற்குள் அடங்கியிரு. உன்னை பராமரிக்க அன்பு செலுத்த உன்னுடைய ஆதாமிடத்தில் தேவன் உன்னை கொண்டு நிறுத்துவார்.

தேவன் செய்கிற வேலையை தேவன் செய்யட்டும். நீங்கள் அதை செய்ய முற்படுவீர்களானால் தோல்வி நிச்சயம்.

நானும் என் வீட்டாருமோ என்றால் கர்த்தரையே சேவிப்போம்.

திருமண பந்தம் மனித திட்டம் அல்ல தேவனால் நியமிக்கப்பட்டது. ஆதி 2:18-24

உண்மையில்லாத நடக்கை திருமண வாழ்வை சிதைக்கும். மத் 5:32

திருமணம் பந்தத்தில் அன்பு கூறுதலும், கீழ்படிதலுமே பார்க்கவேண்டும். கவர்ச்சி அல்ல எபே 5:21-33

திருமண வாழ்வின் எல்லைக்கு வெளியே கொள்ளும் பாலுறவுகள் பாவம் எபி 13:4

திருமணம் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் நிழலுருவம். எபே 5:23,24

அது கனமுள்ளது…..

அது பரிசுத்தமுள்ளது...

> விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். எபி-13:4
>
> நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண் டிருக்கிறேன். 2 கொரி 11:2

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.